மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. இரா. காமராஜ் அவர்களே, தற்போது, மன்னார்குடியில் உள்ள நம்முடைய சங்கமே அதிகமான பால் கொள்முதல் செய்கிறது. ஆனால், local–ல் நிறைய sales ஆவதால், அவர்கள் அதை local–ல் sales செய்கிறார்கள். ஆவினுக்குப் பாலைக் கொடுக்கவில்லை. அவர்களுக்கும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாங்கள் தற்போது உத்தரவிட்டிருக்கிறோம். எல்லோருக்கும் target கொடுத்திருக்கிறோம். யாருக்கு கடன் உதவி தேவைப்பட்டாலும் அவர்கள் ஆவின் அலுவலர்களை அணுகலாம்.

முற்பகல் 11–05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மானியத்துடன்கூடிய கடனைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், DIC மூலமாக 35 சதவிகித மானியத்துடன்கூடிய கடன் வழங்கப்படுகிறது; தாட்கோ மூலமாக ஆதி திராவிட மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படுகிறது; மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படுகிறது; பெண்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் உதவி வழங்கப்படுகிறது; தற்போது பால்வளத் துறை, இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் மானியத்துடன்கூடிய கடன் உதவியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. படித்த இளைஞர்கள், வேலையில்லாத இளைஞர்கள், மகளிர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் ஆகியோருக்கு ஏற்கெனவே இந்த சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் நிச்சயமாக எங்களை அணுகலாம். அவர்களுக்கான கடன் வசதியைப் பெற்றுத் தருவதற்குத் தயாராகயிருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

சூரிய சக்தி மின்வேலிகள்

***4079—திரு. ட்டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2024 பிப்ரவரி 15]

(அ) தளி தொகுதியிலுள்ள வனப் பகுதியில் சூரிய சக்தி மின்வேலிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியிலுள்ள வனப் பகுதிகளில் வன விலங்குகள் காப்புக் காடுகளை விட்டு வெளியேறி விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் நுழைந்து சேதங்கள் ஏற்படுத்துவதையும், மனிதர்கள் மற்றும் வன உயிரின உயிரிழப்பைத் தவிர்க்கவும், வனத் துறை பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. முக்கியமாக, யானை புகா அகழிகள், சூரிய மின்வேலிகள், கற்தடுப்புச் சுவர்கள், இரும்புவட கம்பி வேலிகள், சூரிய சக்தியில் இயங்கும் இரும்புவட கம்பி வேலிகள் மற்றும் தொங்கும் வகையிலான சூரிய சக்தி மின்வேலிகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில் 477.82 சதுர கிலோ மீட்டர் தூரத்திற்கு காவிரி தெற்கு வன உயிரின சரணாலயம் மற்றும் காவிரி வடக்கு வன யானைகள் சரணாலயம் ஆகியவை அமைந்திருக்கின்றன. குறிப்பாக, யானைகள், வன விலங்குகள் ஆகியவை குடிநீர்த் தேவைக்காகவும், உணவுத் தேவைக்காகவும் வனப் பகுதியை விட்டு குடியிருப்புப் பகுதிகளுக்கு வந்து, விவசாயிகளுடைய பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் விளைந்துள்ள நெல், வாழை, கரும்பு, தக்காளி உள்ளிட்ட பயிர்களுக்குச் சேதம் ஏற்படுத்துகின்றன. அதேபோன்று, யானைகள் தாக்குதலால் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. ஆகவே, மனித-வன விலங்குகள் மோதலைத் தடுத்திடவும், விவசாயிகளுக்கு ஏற்படும் பயிர்ச் சேதங்களைத் தடுத்திடவும், என்னுடைய தளி தொகுதியில் வனப் பகுதியையொட்டி

சூரிய மின்வேலி அல்லது கம்பிவட மின்வேலி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தளி தொகுதியில் Tamil Nadu Bio-diversity Conservation and Greening Project (TBGP) திட்டத்தின்கீழ், 14.20 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் யானை புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, Compensatory Afforestation Fund Management and Planning Authority (CAMPA) திட்டத்தின்கீழ் 3.60 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் சூரிய சக்தி மின்வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஒசூர் வனக் கோட்டத்தில், வன விலங்குகள் காப்புக் காடுகளை விட்டு வராமல் இருப்பதற்காக பல்வேறு திட்டங்களின்கீழ், கிரானைட் கற்தடுப்புச் சுவர், இரும்புவட கம்பி வேலி, தொங்கும் வகையிலான சூரிய சக்தி மின்வேலிகள் ஆகியவை ரூபாய் 4 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில், இந்த ஆண்டு யானைகள் தாக்கி 11 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்; 40 கால்நடைகள் உயிரிழந்திருக்கின்றன; 4 வீடுகள் சேதமடைந்திருக்கின்றன; ரூபாய் 2 கோடியே 84 இலட்சம் மதிப்பிலான 3,284 விவசாயிகளுடைய பயிர்கள் சேதமடைந்திருக்கின்றன. ஜவளகிரி வனப் பகுதியிலிருந்து ராயக்கோட்டை வனப் பகுதி வரை 144 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. தற்போது வனத் துறையின் சார்பாக 35 கிலோ மீட்டர் தூரத்திற்குத்தான் சோலார் மின்வேலிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; மீதமுள்ள 109 கிலோ மீட்டர் தூரத்திற்கு சோலார் மின்வேலிகள் அமைக்கப்பட்டால்,

2024 பிப்ரவரி 15]

பயிர்ச் சேதம் மற்றும் மனித–வன விலங்குகள் மோதலைத் தடுக்க முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 109 கிலோ மீட்டர் தூரத்திற்கு சோலார் மின்வேலிகள் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாவட்ட வன அலுவலர் அவர்களின் கருத்துரு பெற்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

சாலை வசதி

***51564—திரு. பி. அய்யப்பன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, கீரிப்பட்டி ஊராட்சி, கீரிப்பட்டி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிக்கு சாலை வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–10

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, கீரிப்பட்டி ஊராட்சி, கீரிப்பட்டி ஆதி திராவிட மக்கள் குடியிருப்புக்கு வடக்குப் புறமாக உள்ள சாலை மிகவும்